1979 பிப்ரவரி 24]

ஃபங்ஷனை, பர்ஃபாமன்சைச் செய்ய முடியுமா? சர்க்காரை அதிகாரிகள் மிஸ்லீட் பண்ணுகிறார்கள். இப்படி ஒன்றரை ஆண்டுகாலமாகப் போடாமல் வைத்திருப்பதன் காரணம் என்ன? தங்களுக்கு விருப்பமானவர்களை நியமிக்க வேண்டுமென்று வைத்திருக்கிறார்களா? இது நிர்வாகக் குறைபாடு என்றால் ஒன்றரை ஆண்டுகாலமாக இவ்வளவு கோர்ஸுகளும் சொல்லிக் கொடுக்கப்பட்டனவா ஒரு நாள் கோயம்புத்தூரிலே நடந்த தற்கே கூச்சல் போட்டோம். ஒன்றரை ஆண்டுக் காலமாக இவ்வளவு முக்கியமான பதவி காலியாக வைத்திருப்பதைக் கவனத்திற் கொண்டு, அதிகாரிகள் சொல்லும் விளக்கத்தைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றுதான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : மாண்புமிகு தலைவரவர்களே, யாரோ ஒருவருக்குச் செய்ய வேண்மென்பதற்காக ஒரு பதவியைத் நிறைவு செய்வதைத் தாழ்த்துவதற்கு இந்த அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்காது. ஆகவே, சரியானவர்களை நியமிக்க உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

திரு எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, எம். எம். சி. மருத்துவக் கல்லூரியில் முக்கியமான இந்தப் பதவி, பேராசிரியர் பதவி ஒன்று, ஒன்றரை ஆண்டுக் காலமாகக் காலியாக இருப்பது மாணவர்களின் கல்வித் தரத்தைப் பாதிக்கத்தக்க நிலையிலே இருக்கிறது. இதில் அரசாங்கத்தின் கருத்து என்ன? ஒன்றரை ஆண்டுக் காலமாக ஏன் நியமிக்கப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, ஏற்கனவே இதற்கான விளக்கம் தரப்பட்டு விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :—அதே கேள்வியை சுப்பு கேட்டார். நீங்களும் அதையே கேட்கிறீர்கள், நேரத்தைக் கொஞ்சம் சேமித்தால் நல்லது.

வேளாண்மைப் பணிகளுக்கு மின் இணைப்பு

வினா எண். 158 *திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாணார்பட்டி வட்டாரத்தில் நிலத்தடி நீர் அதிகமாக இருப்பதால் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதை விரைவு படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

[1979 பிப்ரவரி 24

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இப்பகுதியில் 1—7—1978 வரை மின் இணைப்புக் கோரி வந்துள்ள 16 மனுக்களில், 14 மனுக்கள் நடைமுறையிலும், மற்றும் அனுமதி அளிக்கப்பட்ட திட்டங்களைச் சார்ந்துள்ளன. மீதமுள்ள இரண்டு மனுக்களுக்கும் மனுச் செய்த தேதியின் அடிப்படையில் மட்டும் முன்னுரிமை அளிக்கப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: தலைவரவர்களே சாணார்பட்டி யூனியனில் நிலத்தடிநீர் அதிகமாக இருக்கிறது என்று அரசு சர்டிபிகேட் கொடுத்திருக்கிறது. அப்படியிருந்தும் விவசாயிகளுக்கு பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு ரொம்ப தாமதமாக இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் கவனித்து உடனடியாகக் கொடுக்கப்படும் என்று அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நிலத்தடி நீர் சம்பந்தமான சான்றிதழ் இப்பொழுது தேவையில்லை. வந்த 16 மனுக்களில் 14 மனுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். இன்னும் இருபது கேள்விகள் இருக்கின்றன. இப்பொழுதே 25 நிமிடங்கள் ஆகிவிட்டன. தொகுதி சம்பந்தப்பட்ட கேள்விகளை தொகுதி உறுப்பினர் கேட்டாலே போதும், மற்றவர்கள் நேரத்தைச் சேமிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, இந்தப் புறம் போக்கு நிலங்கள், நிலத்தடி நீர் ஆகியவை ரொம்ப முக்கியமான விஷயங்கள்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்குத் தெரியும் அவ்வளவு நேரம், அமைச்சரிடத்திலிருந்து பல தகவல்களைச் சேகரித்துக் கொடுத்ததற்குப் பிறகுதான் நான் மறு கேள்விக்குப் போனேன். ஆனால் ஏறக்குறைய இருபது பேர்கள் கையை உயர்த்துகிறார்கள். அதற்கென்று அனுமதி தாருங்கள் , ஒரு மணி நேரம்கூட எடுத்துக் கொள்ளலாம். ஆனால் இருபது கேள்விகளை ஒரு மணி நேரத்திற்குள் முடிக்க வேண்டும், அடுத்தபடியா ஒத்தி வைப்புத் தீர்மானம், விவாதங்கள் ஆகியவை வரும்பொழுதும் அதற்கும் அதிக நேரம் தேவை என்று இதே உறுப்பினர்கள் கேட்கிறார்கள். நான் இந்த எப்படி முடிக்க முடியும் எனவே, தய்வு செய்து அமருங்கள்.

1979 பிப்ரவரி 24]

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவரவர்களே, மின் அழுத்தக் குறைவின் காரணமாக தென் மாவட்டங்களில் விவசாயிகள் தங்கள் பம்புசெட்டு ஓடவில்லை என்றும் கூறுவதும், மோட்டார்களில் காயல் பொய்த்துப் போவதால் விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள் என்பதும் இந்த அரசுக்குத் தெரியுமா? அதனை நீக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தனிக் கேள்வி போடவும்.

வினா எண். 159— திரு. டி. ஆர். இராசாராம் ரெட்டி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதியில் மயிலம் ஒன்றியம் பேரணி கிராமத்தில் விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் தொடர்பு பெற 1972-ல் ஸ்டாம்பு அக்ரிமெண்ட் செய்து இருந்தும் நாளது வரை மின் தொடர்பு தராமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—(அ) ஆம்.

(ஆ) இப்பகுதியில் 56 பேருக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம் 1971–72-ல் அனுமதியாகியும், போதிய அளவு மனு தாரர்கள் தயார் நிலையில் அப்போது இல்லாதிருந்ததால் மின் இணைப்பு வழங்க இயலவில்லை. தற்போது, திட்டம் மறு மதிப்பீடு செய்து 68 பேர்களுக்கு மின் இணைப்பு வழங்கும்திட்டம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் முன்னர் அனுமதி வழங்கப் பட்ட 56 பேர்களும் உள்ளனர்.

திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி ; இப்பொழுதுகூட— இன்று வரை எந்தவிதமான வேலையையும் துவக்கவில்லை. 1972-லேயே அக்ரிமென்ட் செய்து சுமார் 7 வருஷமாகிவிட்டது. அதனால் துரிதமாக வேலையைத் துவக்கித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அனுமதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. வேலைகள் துரிதமாக நடைபெற மின் வாரியத்திற்கு ஆணை அனுப்பப்படும்.